## கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்கீட்டு நியமம் | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 09 | நியமத்தின் பிரகாரம், சகல காசினதும் உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்கள் பதியப்பட வேண்டிய போதிலும் திறைசேரியிடமிருந்து மானியமாகப் பெறப்பட்டிருந்த ரூபா 42 மில்லியன் தொகை காசுப்பாய்ச்சலுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 | மீளாய்வாண்டின் இறுதியில் பணிக்கொடைக் கொடுப்பனவிற்காக ரூபா 18,102,966 தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் நியமத்தின் பிரகாரம் பொறுப்புகளை மேவும் வகையில் முதலீடு மேற்கொள்ளப்பட்டிராததுடன் ரூபா 1,297,780 தொகையான முதலீடு மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) இருப்புப் பேரேட்டினதும் பிரதான பேரேட்டினதும் இருப்புக் கணக்கிற்கு இடையே ரூபா 54,195 தொகையான இருப்பு மீதி இனங்காணப்படாது இருப்பு சீராக்கற் கணக்கினூடாக இலாப நட்டக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மாகாண சபை நிதியத்தின் கீழ் பூர்த்தியாக்கப்பட்ட நிர்மாணிப்பு வேலைகளுக்காக பெறப்பட்ட மற்றும் ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்தப்படாத ரூபா 190,433 தொகையான பெறுமதி சேர் வரி சேவை கட்டண வருமானமாக கணக்கிடப்பட்டிருந்தது.

(இ) கணக்கீட்டுக் குறிப்பு இல. 7 இன் பிரகாரம், அறவிடமுடியாத மற்றும் ஐயக்கடன் ஏற்பாட்டுக் கொள்கை மீளாய்வாண்டின் போது மாற்றப்பட்டிருந்ததுடன் 1 - 4 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்கான உரித்தான ரூபா 7,253,690 தொகையான கடன்பட்டோருக்காக போதிய அறவிடமுடியாத மற்றும் ஐயக்கடன் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 அதிகாரசபையின் தொடர்ந்து இயங்கும் தன்மை

அதிகாரசபையின் தேறிய சொத்துக்கள் மீளாய்வாண்டு மற்றும் கடந்த 02 ஆண்டுகளின் போது முறையே ரூபா 31,794,284 தொகையும் ரூபா 12,841,863 தொகையும் ரூபா 12,869,156 தொகையுமாக எதிர்மறைப் பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது தேறிய சொத்துக்கள் 147% ஆல் வீழ்ச்சியடைந்தும் நடைமுறை விகிதம் முறையே 1:2.07, 1:1.9 மற்றும் 1:2.8 ஆக இருந்தமையால் திறைசேரியின் நிதி உதவி இன்றி அதிகாரசபை தொடர்ச்சியாக இயங்குவதில் சிக்கல் நிலை காணப்பட்டது.

2009 ஆம் ஆண்டின் போது திறைசேரியின் ஏற்பாடு பெறப்பட்டு 125 ஊழியர்கள் சுயமாக ஓய்வுபெற்றமை காரணமாக இந் நிலைமையில் மாற்றம்

ஏற்பட்டுள்ளதாகவும் 2012 ஆம் ஆண்டின் சம்பளத்திற்காக திறைசேரியின் ஏற்பாடு பெறப்படும் நிலையில் இதில் மாற்றத்தை எதிர்பார்க்க முடியும் எனவும் அதிகாரசபையின் பொது முகாமையாளரினால் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

### 1.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் கணக்கு மீதிகள் வெளித்தரப்பினர்களின் உறுதிப்படுத்தல்களுடன் இணங்காமையால் கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

| கணக்கீட்டு விடயம் | 2011 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு கணக்கின் பிரகாரமான மீதி | வெளி சான்றுகளின் பிரகாரமான மீதி | சான்றுகள் | அதிகாரசபைக் கணக்குகளிற்கான தாக்கம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | | |
| சேவை வழங்குனர் கடன்பட்டோர் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை | - | 1,910,914 | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை இறுதிக் கணக்குகள் 2011 (வரைபு) | கடன்பட்டோர் ரூபா 1,910,914 ஆல் குறைத்துக் காண்பிக்கப் பட்டிருந்தது. |
| ஊழியர்களின் முற்பணங்கள் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை | 1,229,974 | 8,863 | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை 2011 இறுதிக் கணக்குகள் 2011 (வரைபு) | கடன்கொடுத்தோர் ரூபா 1,221,111 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. |

### 1.2.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 05 ஆண்டுகளுக்கு மேலாக முன்கொண்டுவரப்பட்ட ரூபா 3,643,158 தொகையான 05 சேவை நாடுனர் கடன்பட்டோரிடம் இருந்து

பெறவேண்டிய கடன் தொகையை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 05 ஆண்டுகளுக்கு மேலாக முன்கொண்டுவரப்பட்ட சேவை நாடுனர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்கள் ரூபா 104,453 தொகையும் நிர்மாணிப்புகள், பொறியியல் சேவைகள், வீடமைப்பு பொது வசதிகள் அமைச்சிற்குச் செலுத்த வேண்டிய ரூபா 9,350,215 தொகை நானாவித முற்பணத் தொகையான ரூபா 223,014 உம் பொருட்கள் மற்றும் சேவைகள் வரித் தொகையான ரூபா 15,733,971 உம் தீர்க்கப்படுவதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.2.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 41,497,720 பெறுமதியான 04 கணக்கு மீதிகள் மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் இன்மையால் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தமுடியாதிருந்தது.

### 1.2.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1973 இன் 10 ஆம் இலக்க பொது வசதிகள் சபையின் சட்டங்கள் மற்றும் 2003 இன் 24 ஆம் இலக்க பொது வசதிகள் சபை (திருத்தம்) அதிகாரச்சட்டம்<br>- 5 ஆம் பிரிவின் (உ) பந்தி | கூட்டு ஆதனத்தின் முகாமைத்துவ கூட்டுத்தாபனத்தினதோ அல்லது பகுதியளவான கூட்டு ஆதன முகாமைத்துவ கூட்டுத்தாபனத்தினதோ சொத்துக்கள் முறையாக செயற்படுவதாக பொறுப்பேற்றலும் அதன் முகாமைத்துவ கூட்டுத்தாபன நடவடிக்கைகளை முகாமைத்துவம் கட்டுப்படுத்த வேண்டிய போதிலும் 2005 ஆம் ஆண்டு முதல் 2012 யூன் 30 ஆம் திகதி வரை கூட்டு ஆதன சான்றிதழ் |

| | |
|---|---|
| | வழங்கிய அளவு 555 ஆகக் காணப்பட்டதுடன் பதிவு செய்யப்பட்ட முகாமைத்துவக் கூட்டுத்தாபன எண்ணிக்கை 204 அளவில் காணப்பட்டது. |
| - 5 ஆம் பிரிவின் (எ) பந்தி | கூட்டு ஆதனத்தினது பொது வசதிகள் பராமரிப்பினை உள்ளுராட்சி நிறுவகத்திற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறை வரி அதிகாரச்சட்டம் 114 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் முதல் காலாண்டின் போது ரூபா 26,921 தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரி உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்படுவதற்குப் பதிலாக அதிகாரசபையினால் செலுத்தப்பட்டிருந்தது. |

### 1.2.8 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பராமரிப்புச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக முகாமைத்துவ கூட்டுத்தாபன நிதியமாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து ரூபா 6,751,832 தொகை 2010 சனவரி 08 ஆம் திகதி கிடைத்திருந்த போதிலும் 2011 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறும் முகாமைத்துவ கூட்டுத்தாபனம் ஸ்தாபிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் முறையான அங்கீகாரம் இன்றி நிலையான வைப்பில் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறும் அம் மீதி ரூபா 7,079,043 ஆகக் காணப்பட்டது.

(ஆ) 2011 பெப்ரவரி 19 ஆம் திகதிய 253- 5725 ஆம் இலக்க கப் வண்டியில் ஏற்பட்ட விபத்திற்காக அதிகாரியினால் ரூபா 142,475 தொகை ஏற்கப்பட்டு திருத்தப்பட்டிருந்ததுடன் இதற்காக இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் இருந்து ரூபா 95,450 தொகை மாத்திரம் மீளளிக்கப்பட்டிருந்தமையால் ஏற்பட்ட ரூபா 47,025 தொகையான நட்டத்திற்கு பொறுப்புக் கூறவேண்டிய உத்தியோகத்தர்களை நிச்சயிக்கப்படுவதற்காக ஆய்வுசெய்யப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக அதிகாரசபையின் பற்றாக்குறை ரூபா 18,952,421 ஆனதுடன் இதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 27,293 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் தேறிய மிகை ரூபா 18,979,714 ஆல் வீழ்ச்சியுற்றிருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் பிரகாரம் அதிகாரசபையின் நிதிசார் விளைவுகள் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு மற்றும் முன்னைய ஆண்டின் இறுதியிலுள்ளவாறானவை மீது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது சேவை அறவீட்டு வருமானம் 727% ஆல் அதிகரித்திருந்ததுடன் 03 செயற்திட்டங்கள் பூர்த்திசெய்யப்படுவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 42 மில்லியன் தொகை திறைசேரியில் இருந்து பெறப்பட்டிருந்ததுடன் அச் செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக கிடைக்கப்பெற்ற சேவை வருமானம் இதற்குக் காரணமாகியிருந்தது.

(ii) அதிகாரசபையின் முக்கிய வருமான வளமான கூட்டு ஆதன முகாமைத்துவ சான்றிதழ் விநியோகிப்பு வருமானம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது 40% ஆல் குறைந்திருந்தது.

(iii) ஜனசெவன செயற்திட்டம் மற்றும் முகாமைத்துவக் கூட்டுத்தாபன ஸ்தாபிப்புச் செலவினம் ஏற்கப்பட்டதன் காரணமாக கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது செயற்திட்டச் செலவினம் 337% ஆல் அதிகரித்திருந்தது.

### 2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

மீளாய்வாண்டின் போது முறையே நடைமுறை விகிதம் மற்றும் திரவச் சொத்து விகிதம் 1:2:07 ஆகவும் 1:2:09 ஆகவும் காணப்பட்டதுடன் கடந்த ஆண்டின் போது அவ் விகிதம் முறையே 1:1:90 ஆகவும் 1:1:93 ஆகவும் காணப்பட்டமையால் அதிகாரசபை தொழிற்படு மூலதன சிக்கல்களுக்கு முகம்கொடுத்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

மீளாய்வாண்டின் போதான அதிகாரசபையின் செயவலாற்றல் இலக்குகளுடன் ஒப்பிடப்பட்டு கீழே தரப்படுகின்றது.

| விடயம் | இலக்கிடப்பட்டவை | செயலாற்றல் | செயற்பாட்டுத் திட்டத்தின் பிரகாரமான முன்னேற்றத்தின் சதவீதம் |
|---|---|---|---|
| - முகாமைத்துவ கூட்டுத்தாபனங்கள் ஸ்தாபிக்கப்படுவதனைப் பதிவுசெய்தல் மற்றும் புதுப்பித்தல் | 240 | 184 | 77 |
| - கூட்டு ஆதனங்களை ஒழுங்குபடுத்தல், தரப்படுத்தல் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் | 160 | 25 | 16 |
| - கூட்டு ஆதன சான்றிதழ்கள் வழங்கல் | 80 | 72 | 90 |

கூட்டு ஆதனங்களை ஒழுங்குபடுத்தல், தரப்படுத்தல் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளின் முன்னேற்றம் இலக்காகக் கொண்ட அளவைப் பார்க்கிலும் 16% அளவிலான குறைவான மீதியைக் கொண்டிருந்தது.

## 3.2 முகாமைத்துவத் திறமையீனங்கள்

அதிகாரசபையினால் தமது நோக்கங்களுக்கு மாறாக கம்பஹா மற்றும் நீர்கொழும்பு வைத்தியசாலைகளில் நீர் மற்றும் மலசலகூட முறைமை செயற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு 2011 ஆம் ஆண்டிற்காக ஓர் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது முறையே ரூபா 1,971,028 உம் ரூபா 1,618,465 தொகையுமான உண்டியல்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 1,449,653 கம்பஹா வைத்தியசாலையில் இருந்தும் ரூபா 802,749 நீர்கொழும்பு வைத்தியசாலையில் இருந்தும் பெறவேண்டியிருந்தது.

## 3.3 பதவியணி நிர்வாகம்

மீளாய்வாண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 132 ஆனதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான பதவியணி 110 ஆகக் காணப்பட்டது.
மீளாய்வாண்டின் போது 24 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்த போதிலும் உயர் முகாமைத்துவ உத்தியோகத்தர்களின் வெற்றிடத்தை நிரப்பாமை நிறுவகத்தின் செயற்திறனுக்கு நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

## 3.4 வாகனப் பாவனை

அதிகாரசபையிடம் 09 வாகனங்கள் இருந்ததுடன் அவ் வாகனங்களிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,694,432 தொகையான எரிபொருட் செலவினத்திற்காகவும் ரூபா 3,437,841 தொகை பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புச் செலவினத்திற்காக செலவிடப்பட்டிருந்தது. ஆகையால் மீளாய்வாண்டின் போது வாகன திருத்திவேலைகள் மற்றும் பராமரிப்புச் செலவினங்கள் உயர் பெறுமதியைக் கொண்டமைந்தமையால் ஒரு கிலோமீற்றருக்கு சராசரி ஓட்டச் செலவினம் ரூபா 27 இற்கும் ரூபா 34 இற்கும் இடையிலான வீச்சில் நிலவியது.

## 4. கணக்களி பொறுப்பு நல்லாளுகையும்

### 4.1 கூட்டுத்திட்டம்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் அதிகாரசபையின் கூட்டுத்திட்டம் தயாரிக்கப்படுகையில் பின்பற்றப்பட வேண்டிய பின்வரும் நியமங்கள் கருத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- கடந்த 03 ஆண்டுகளின் செயற்பாட்டு நடவடிக்கைகள்
- வருடாந்தம் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளின் எண்ணிக்கை

### 4.2 செயற்பாட்டுத் திட்டம்

செயற்பாட்டுத் திட்டத்தின் இலக்குகளும் அவை எய்தப்பட்டவற்றிற்கும் இடையில் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய முரண்கள் அவதானிக்கப்பட்டன. இலக்குகளை எய்தும் நிலைகள் காலக்கிரமத்தில் மீளாய்வு செய்யப்பட்டு நலிவுகள் இனங்காணப்பட்டு இதற்கு முறையான தீர்வுகள் எடுக்கப்படுவதற்கான இயலுமை தொடர்பாக முகாமைத்துவம் முறையான கவனத்தைக் கோரியிருக்கவில்லை. இந் நிலை நிறுவகத்தின் நலிவான நிதி நிலையைப் போன்று தொடர்ந்தியங்கும் தன்மையிலும் நேரடித் தாக்கத்தைக் கொண்டிருந்தது.

### 4.3 முகாமைத்துவ சபையின் அமைப்பு

2003 இன் 24 ஆம் இலக்க பொது வசதிகள் சபை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் முகாமைத்துவ சபை நியதிச்சட்ட அதிகாரத்தினால் நியமிக்கப்படும் 09 அங்கத்தவர்களையும் அமைச்சரினால் நியமிக்கப்படும் 06 பேரையும் கொண்டிருக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது முகாமைத்துவ சபையின் அங்கத்துவம் நியதிச்சட்ட அதிகாரத்தினால் நியமிக்கப்படும் 08 அங்கத்தவர்களையும் அமைச்சரினால் நியமிக்கப்படும் இருவரையும் மாத்திரம் கொண்டு வரையறுக்கப்பட்டிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது அதிகாரசபைத் தலைவருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விசேட அவதானம் கோரப்படுகின்றது.

(அ) வாகனக் கட்டுப்பாடு

(ஆ) கூட்டு ஆதன சான்றிதழ்கள் வழங்கல்